©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 10] சென்னை, புதன்கிழமை, மார்ச் 8, 2017
மாசி 24, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2D) எண் 54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 07 டிசம்பர் 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு மற்றும் 3ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15–09–2004 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–இல், 454–455ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் II(2)/தொ.வே.வா/ 825/2004 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரித்தல் உட்பட) தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழே விவர அட்டவணையின் நெடும்பத்தி (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அதன் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரிப்பு உட்பட) தொழிலில் வேலைவாய்ப்பு**

| | தொழிலாளர் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) ரூ. காசு |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | மேலாளர் | 5000.00 |
| 2. | கணக்காளர்/கணினி இயக்குபவர் | 4750.00 |
| 3. | எழுத்தர்/தட்டச்சர்/விற்பனையாள் | 4500.00 |
| 4. | சேகரிப்பவர் | 4375.00 |
| 5. | சரிபார்ப்பவர்/மேஸ்திரி/வகைப்படுத்துபவர்/கண்காணிப்பாளர் | 4250.00 |

| தொழிலாளர் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) ரூ. காசு |
|---|---|
| (1) | (2) |
| 6. இலை, தூள் வழங்குபவர்/பை தைப்பவர்/சிப்பமாக்குபவர் | 4125.00 |
| 7. அலுவலக உதவியாள்/ஏவலாள் | 4125.00 |
| 8. ஓட்டுநர் (டிரக்/லாரி) | 4125.00 |
| 9. ஓட்டுநர் (சீருந்து/வேன்) | 4000.00 |
| 10. காவலாளி | 3500.00 |
| 11. துப்புரவாளர்/பெருக்குபவர் | 3125.00 |
| 12. ஏனைய பணியாளர்கள் | 3125.00 |

**செய்யும் வேலைக்கேற்ப ஊதியங்கள் :**

(1) 4000 கட்டுகளின் மீது லித்தோ உறைகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 156.25 பெயர்ச்சீட்டு ஒட்டுதல்

**விளக்கங்கள் :**

(i) ஒவ்வொரு கட்டும் 25 பீடிகள் கொண்டது.

(ii) கட்டு ஒன்றுக்கு 10, 15 அல்லது 20 பீடிகள் கொண்ட கட்டுகளுக்கு பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு வீதப்படியான ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும்.

(iii) "மேல் பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு" 30% மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அகவிலைப்படியும் வழங்கப்பட வேண்டும்.

2. வளைய பெயர்ச்சீட்டு ஒட்டுதல் 1000 பீடிகளுக்கு ரூ. 6.25 (வளைய பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு பசையும் நூலும் நிருவாகத்தால் வழங்கப்பட வேண்டும்.) ஒரு நாள் உழைப்பு என்பது நாளொன்றுக்கு 10,000 பீடிகள் தயாரிப்பதாகும்.

**விளக்கங்கள்:**

(1) **அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 6.55 (ஆறு ரூபாய் ஐம்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி.அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந.அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 07 டிசம்பர் 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 11–09–2013 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II பிரிவு–2இல் 618–619 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/700/2013ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் தேங்காய் உரித்தல் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழே விவர அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## தேங்காய் உரித்தல் தொழிலில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் | பணிகளின் வகைகள் | | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| 1. | **தேங்காய் உரித்தல்:** | | | |
| | (i) | காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 232.00 |
| | (ii) | செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 294.00 |
| 2. | **மரம் ஏறுதல் மற்றும் தேங்காய் பறித்தல்:** | | | |
| | (i) | காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 232.00 |
| | (ii) | செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | மரம் ஒன்றுக்கு | ரூ. 4.12 |
| 3. | **தேங்காய்களை தரம் பிரித்தல்** | | | |
| | (i) | காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 194.50 |
| | (ii) | செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 30.87 |
| 4. | **தேங்காய்களை ஏற்றி இறக்குதல்** | | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 294.00 |
| 5. | தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் | | நாளொன்றுக்கு | ரூ. 189.00 |
| 6. | மரங்களை சுத்தப்படுத்துதல், உரமிடுதல் மற்றும் பூச்சிக்கொல்லியிடுதல் | | மரம் ஒன்றுக்கு | ரூ. 9.80 |

**விளக்கங்கள்:**

**(1) அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு ரூ. 1.15 (ஒரு ரூபாய் பதினைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 56, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 07 டிசம்பர் 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த வரைவு அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 04—09—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II. பிரிவு—2இல் 604 மற்றும் 605 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/683/2013ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் பருத்தியில் கொட்டை நீக்குதல், பஞ்சு அடித்தல் மற்றும் கழிவுப் பஞ்சினை அகற்றும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### பருத்தியில் கொட்டை நீக்குதல், பஞ்சு அடித்தல் மற்றும் கழிவுப் பஞ்சினை அகற்றும் பணிகளில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| I. | **உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1 | தச்சர் | நாளொன்றுக்கு ரூ. 242.50 |
| 2 | மின்கம்மியர் | |
| 3 | இயந்திரக் கம்மியர் | |
| 4 | வில்லோ ஓட்டுநர் | |
| 5 | அழுத்தப்பொறி ஓட்டுநர் | |
| 6 | விதையகற்றுபொறி ஓட்டுநர் | |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **II.** | **தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1 | பெட்டி பணியாளர் | நாளொன்றுக்கு ரூ.230.00 |
| 2 | அழுத்தப்பொறி பொருத்துனர் / பொதுப் பொருத்துனர் / விதையகற்றுபொறி பொருத்துனர் | |
| 3 | மேலாள் | |
| 4 | அடையாளமிடுபவர் | நாளொன்றுக்கு ரூ.229.00 |
| 5 | வால்வுப் பணியாளர் | |
| 6 | எண்ணெயிடுபவர் | நாளொன்றுக்கு ரூ.227.00 |
| 7 | மீள்வுறுத்துநர் (ரிவெர்ட்டர்) | |
| 8 | எடையாளர் | |
| 9 | உருளை உருட்டுபவர் | |
| **III.** | **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1 | லஸ்கர் (உதவியாளர்) | நாளொன்றுக்கு ரூ.230.00 |
| 2 | பொதி தைப்பவர் | நாளொன்றுக்கு ரூ.227.00 |
| 3 | விதையகற்று பொறியில் பருத்தி இடுபவர் | நாளொன்றுக்கு ரூ.225.00 |
| 4 | சாவி திறப்பாளர் | நாளொன்றுக்கு ரூ.227.00 |
| 5 | விதையகற்றுபொறி மற்றும் அழுத்தப்பொறி மஸ்தூர்கள் | நாளொன்றுக்கு ரூ.223.00 |
| **IV.** | **தேர்ச்சி பெறாதவர்கள்:** | |
| 1 | மூட்டை எடுத்துச் செல்லுபவர் | நாளொன்றுக்கு ரூ.231.00 |
| 2 | போரா நிரப்புபவர் | நாளொன்றுக்கு ரூ.229.00 |
| 3 | போரா உருட்டுபவர் | நாளொன்றுக்கு ரூ.225.00 |
| 4 | பொதியாக்குபவர் | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 5 | பருத்தியெடுத்தல் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 6 | பருத்தியை சுத்தப்படுத்த அடிப்பவர்கள் | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 7 | பருத்தி எடுத்துச் செல்பவர் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 8 | கேப்ஸ் பை திறப்பவர் | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 9 | கேப்ஸ் எடுப்பவர் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 10 | லின்ட் சுத்தப்படுத்துபவர் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 11 | தைப்பவர்கள் (பொதி தைப்பவர் அல்லாதவர்கள்) | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 12 | விதை அகற்றுபவர் அல்லது எடுத்துச் செல்லுபவர் | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 13 | பெருக்குபவர் | நாளொன்றுக்கு ரூ.223.00 |
| 14 | பருத்தி சுத்தப்படுத்தும் இருக்கையாள் | நாளொன்றுக்கு ரூ.221.50 |
| 15 | அட்டியிடுபவர் | நாளொன்றுக்கு ரூ.227.50 |
| 16 | போரா திறப்பவர் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 17 | பருத்திக் கழிவு சுத்தப்படுத்துபவர் | நாளொன்றுக்கு ரூ.220.00 |
| 18 | துடைப்பான் செய்பவர் | நாளொன்றுக்கு ரூ.227.00 |
| 19 | மேற்சொன்னவற்றில் சேராத ஏனைய யாதொரு வகை | நாளொன்றுக்கு ரூ.220.00 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **V. பல்வகை:—** | | |
| 1 | கணக்காளர் | மாதமொன்றுக்கு ரூ.6190.00 |
| 2 | எழுத்தர் / தட்டச்சர் | மாதமொன்றுக்கு ரூ.6050.00 |
| 3 | காவலாள் | மாதமொன்றுக்கு ரூ.5799.00 |
| 4 | அலுவலகப் பையன்/ ஏவலர் | மாதமொன்றுக்கு ரூ.5799.00 |

**விளக்கங்கள்:**

(1) **அகவிலைப்படி :—** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது, (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு) 161 புள்ளிகள். 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு ரூ. 36.00 (ரூபாய் முப்பத்து ஆறு மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) (i) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை—I**

*[அரசாணை (நிலை) எண் 256 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 23 டிசம்பர் 2016.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996) கீழ் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து பணியாளர் தொகுதிகளுக்கும் தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமுள்ள அதிகார எல்லைகளுக்கு மேல் முறையீட்டு அதிகாரியாக, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை முதுநிலை கூடுதல் இயக்குநரை (கட்டடங்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள்) இதனால் நியமனம் செய்கிறார்:—

**அறிவிக்கை—II**

*[அரசாணை (நிலை) எண் 256 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 23 டிசம்பர் 2016.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 6 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின், அத்தியாயம் 3 இன் செயல் நோக்கங்களுக்காக, கீழேயுள்ள அட்டவணையின் (2) நெடும்பத்தியில் உள்ள பணியாளர்த் தொகுதிகளைப் பொறுத்த வரையில், அந்த அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளைப் பதிவு அதிகாரிகளாக இதனால் நியமிப்பதுடன் விவர அட்டவணையின் (3) நெடும்பத்திக்கு நிகரான பதிவுகளில் எல்லைகளையும் இதனால் வரையறை செய்கிறார்:—

*விவர அட்டவணை*

| அதிகாரிகள் (1) | பணியாளர்த் தொகுதிகள் (2) | எல்லைகள் (3) |
|---|---|---|
| தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1996) வரம்பெல்லையின் கீழ் வருகிற அனைத்துப் பணியாளர் தொகுதிகள் | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (b) ஆம் உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட எல்லைகள் |

**அறிவிக்கை—III**

*[அரசாணை (நிலை) எண் 256 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 23 டிசம்பர் 2016.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 11ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின், அத்தியாயம் IV இன் செயல் நோக்கங்களுக்காக, கீழேயுள்ள அட்டவணையின் (2) நெடும்பத்தியில் உள்ள பணியாளர் தொகுதிகளைப் பொறுத்த வரையில், அந்த அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை உரிமம் வழங்கும் அதிகாரிகளாக இதனால் நியமிப்பதுடன் விவர அட்டவணையின் (3) நெடும்பத்திக்கு நிகராக உள்ள பதிவுகளில் உள்ளூர் பகுதி எல்லைகளையும் இதனால் வரையறை செய்கிறார்:—

*விவர அட்டவணை*

| அதிகாரிகள் (1) (2) | பணியாளர் தொகுதிகள் (3) | உள்ளூர் பகுதி எல்லைகள் |
|---|---|---|
| தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1996) வரம்பெல்லையின் கீழ் வருகிற அனைத்துப் பணியாளர் தொகுதிகள் | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1996) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) ஆம் உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் பகுதி எல்லைகள் |

**அறிவிக்கை—IV**

*[அரசாணை (நிலை) எண் 256 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 23 டிசம்பர் 2016.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 28 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1996) கீழ் உள்ள பணியாளர்த் தொகுதிகளைப் பொறுத்த வரையில், மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, கீழேயுள்ள அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை ஆய்வாளர்களாக இதனால் நியமனம் செய்து அந்த அட்டவணையில் (2) ஆம் நெடும்பத்தியில் அதற்கு நேராக உள்ள பதிவுகளில் அவர்களுக்கான எல்லைகளை குறிப்பிட்டு இதனால் ஒதுக்கீடு செய்கிறார்:—

*விவர அட்டவணை*

| அதிகாரிகள் (1) | எல்லைகள் (2) |
|---|---|
| தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை முதுநிலை கூடுதல் இயக்குநர் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |
| தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டத்தின் (வேலை வாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) (மத்தியச் சட்டம் 27/1996) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (b) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எல்லைகள் |
| தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்)<br><br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை உதவி இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | 1996 கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டத்தின் (வேலை வாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) (மத்தியச் சட்டம் 27/1996) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த 3 உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளூர் பகுதி எல்லைகள் |

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 18 ஜனவரி 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அவைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 24—04—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II. பிரிவு—2 இல் 292—293 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/335/2013ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை இரத்துசெய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் ஏதேனும் அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலையில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழே விவர அட்டவணையின் நெடும்பத்தி (2)இல் குறிப்பிடப்படடுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## ஏதேனும் அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலையில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு.)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | ஹமாலிஸ் (மூட்டை சுமந்து செல்பவர்கள்) | 218.00 |
| 2 | மூட்டையை எடையிடும் கட்டா மஸ்தூர் | 215.50 |
| 3 | மூட்டையை தைப்பவர்கள் | 215.50 |
| 4 | உமியை சுமந்து செல்பவர்கள் | 210.50 |
| 5 | பல்வகைத் தொழிலாளர்கள் உட்பட மஸ்தூர்கள் | 210.50 |
| 6 | அரிசியை சுமந்து செல்பவர்கள் | 210.50 |
| 7 | இஞ்சின் ஓட்டுநர் | 225.00 |
| 8 | மின்கம்பியாளர் | 225.00 |
| 9 | தீயணைப்பவர் | 211.00 |
| 10 | பொருத்துநர் | 215.50 |
| 11 | உமிநீக்குபவர் | 211.00 |
| 12 | மேஸ்திரிகள் | 218.00 |
| 13 | இயந்திரக்கம்மியர் | 218.00 |
| 14 | எண்ணெய் இடுபவர் | 210.50 |
| 15 | நெல் கொதிகலன் பணியாளர் | 215.50 |
| 16 | நெல் இயந்திர ஓட்டுநர் | 210.50 |
| 17 | நெல் அரைவையாளர் | 210.50 |
| 18 | பெருக்குபவர் | 210.50 |
| 19 | தோடு நீக்குபவர் | 210.50 |
| 20 | புடைப்பவர் | 210.50 |
| 21 | நெல் ஊறவைப்பவர் | 210.50 |
| 22 | நீரை எடுத்துச்செல்பவர் | 210.50 |
| 23 | காவலாள் | 210.50 |
| 24 | அரிசியை மெருகேற்றும் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மஸ்தூர் | 210.50 |
| 25 | அரிசியை அளப்பவர் | 211.00 |
| 26 | தானியத்தை அரைக்கும் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மஸ்தூர் | 210.50 |
| 27 | பருப்பு உற்பத்தியாளர்கள் | 210.50 |
| 28 | சுமைதூக்குபவர் | 210.50 |
| 29 | ஏவலாள் | 210.50 |
| 30 | தச்சர்கள் | 215.50 |
| 31 | வறுகடலைத்தொழிலாளர்கள் | 218.00 |
| 32 | எழுத்தர் | 6155.00 திங்களொன்றுக்கு |
| 33 | துணையாள் | 5938.00 திங்களொன்றுக்கு |

**விளக்கங்கள்:**

**(1) அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு ரூ. 1.30 (ஒரு ரூபாய் முப்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) (i) நாட்கூலி வீதங்கள் மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை நாள் ஊதியங்களும் அடங்கும்..

(ii) நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(iii) மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## திருத்த அறிவிக்கை

*[அரசாணை (2D) எண் 1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 03 ஜனவரி 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 23—03—2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2—இல், 233 முதல் 234 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/243/2016 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், முகப்புரையில் பத்தி 1—க்கு பிறகு பின்வரும் பத்தி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் அவையாவன:—

“2. இந்த அறிவிக்கை 15—8—2015 அன்றிலிருந்து செயலுக்கு வரும்”.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.